பதிவாந்தல் ஒப்புகையுடன்:

24 MAR 2017

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் ஆணையர், சென்னை-106 அவர்களின் செயல்முறை ஆணை.

முன்னிலை திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப.,

ந.க.எண்: 3097/ந2/3/2017 நாள்: 21.03.2017

பொருள்: நிர்வாகம் - இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை, சென்னை - 106 - M. தனலட்சுமி, தட்டச்சர் மற்றும் E. தமிழரசன், தட்டச்சர் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் சென்னை – 106 – பணிவரன்முறை ஆணை வழங்குவது – தொடர்பாக.

பார்வை: 1.செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 5904/PSD-F/ 2014, நாள்: 03.09.2014.

2.சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் அவர்களின் கடித எண்: 56491/ந2/2/2014, நாள்: 10.09.2014.

3.இவ்வாணையரக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்: 10631/ந2/3/2014, நாள்: 23.09.2014

*****

ஆணை:

பார்வை 1-ல் கண்டுள்ள கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தட்டச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 2-ல் கண்டுள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குனர் அவர்களின் கடிதத்தின்படி இத்துறைக்கு விடுவிக்கப்பட்டு பார்வை (3)-ல் கண்டுள்ள இவ்வாணையரக பணி நியமனம் மற்றும் பணியமர்த்தல் ஆணையின்படி கீழ்க்கண்ட நபர்கள் அவர்கள் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிலையம் மற்றும் நாளில் பணியில் இணைந்துள்ளனர்.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் நிலையம் | பணியில் இணைந்த நாள் |
|---|---|---|---|
| 1. | M. தனலட்சுமி | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் | 29.09.2014 மு.ப. |
| 2. | E. தமிழரசன் | அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையில் | 29.09.2014 மு.ப. |

2.பார்வை (1) மற்றும் (2)-ல் கண்டுள்ள ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களின் பணியினை அவர்கள் பணியில் இணைந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யலாம் என அறிவுரை பெறப்பட்டுள்ளதால், மேற்கூறிய தட்டச்சர்கள் பணியில் இணைந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

3.மேலும், பார்வை 1-ல் கண்டுள்ள சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளரின் கடிதத்தின்படி " 2013-2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-IV தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தட்டச்சர்களின் பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் இத்தேர்வு தொடர்பாக நிலுவையிலுள்ள வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டது" எனத் தெரிவிக்கப்படுகிறது.

4.எனவே, சென்னை – 106, அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவமனையில் தட்டச்சர்களாகப் பணிபுரியும் மேற்கூறிய தனியர்களின் பணியானது அவர்கள் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 29.09.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு, தனியர்கள் தகுதிகாண் பருவத்தில் அமர்த்தப்படுகின்றனர். மேலும் நடைமுறையிலுள்ள பணி விதிகளின்படி தனியர்கள் தங்களது தகுதிகாண் பருவமான இரண்டு வருட பணிக்காலத்தைத் தொடர்ந்து மூன்று வருடகாலத்திற்குள் முடித்திட வேண்டுமெனவும், தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு மருத்துவ விதித்தொகுப்பு நூல் தேர்வு மற்றும் கணிப்பொறியியல் அலுவலக தானியங்கி (Computer on Office Automation) தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு : பணிப்பதிவேடு ஒரு பகுதி (M. தனலட்சுமி)
: பணிப்பதிவேடு ஒரு பகுதி (E. தமிழரசன்)
சான்றிதழ் விவரங்கள்

மோகன் பியாரே
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர்

பெறுநர்
தனியர்கள் ---------- உரிய வழிமுறையாக

நகல்:

1.மருத்துவமனைக் கண்காணிப்பாளர்,
அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை
மருத்துவமனை

(M. தனலட்சுமி மற்றும் E. தமிழரசன், தட்டச்சர்களின் பணிப்பதிவேடுகள் மற்றும் சான்றிதழ்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தனியர்களின் பணிப்பதிவேடுகளில் மேற்கொள்ளுமாறும் மற்றும் பணிப்பதிவேடுகளை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகையினை

இவ்வாணையரகத்திற்கு உடன் அனுப்புமாறும் சென்னை-106, அறிஞர் அண்ணா அரசு இந்தியமுறை மருத்துவமனை, மருத்துவமனைக் கண்காணிப்பாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

2.இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்,
சென்னை – 6.

3.சம்பளக் கணக்கு அலுவலர்(தெற்கு)/பட்டியல் பிரிவு.

4.தனியரின் பணிப்பதிவேடு

5.முக்கிய ஆணைத் தொகுப்பு

உண்மைநகல்/அனுப்பப்படுகிறது

துணை இயக்குநர்(நி)

22/03/17 23/3/17

Endt. No. 1128/E2/17

O/o the Superintendent i/c
Arignar Anna Government Hospital
of Indian Medicine
Arumbakkam, Madras-600 106

Copy communicated for information

23/3/17

Superintendent i/c
Arignar Anna Government Hospital
of Indian Medicine
Arumbakkam, Madras-600 106

To
1. Thiru. E. Tamizhavanan,
Typist.
2. Tmt. M. Dhanalakshmi,
Typist.